செ.வெ.எண்.71 நாள்.24.10.2017.

திருநெல்வேலி மாநகராட்சி பெருமாள்புரம் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் மெகா தூய்மை பணிகள் மற்றும் டெங்கு கொசு ஒழிப்பு பணிகளை திருநெல்வேலி மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத் துறை செயலர் திரு.ராஜேந்திரகுமார், இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் இன்று அதிகாலையில் நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார்கள். டெங்கு கொசு புழு இருப்பது கண்டுபிடிக்கப்பட்ட புதிதாக கட்டப்பட்டு வரும் இரண்டு வீடுகளுக்கு தலா ரூ.50 ஆயிரம் அபராதம் விதிக்க உத்தரவிட்டனர்.

-------

திருநெல்வேலி மாநகராட்சி பெருமாள்புரம் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் மெகா தூய்மை பணிகள் மற்றும் டெங்கு கொசு ஒழிப்பு பணிகளை திருநெல்வேலி மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத் துறை செயலர் திரு.ராஜேந்திரகுமார், இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் இன்று (24.10.2017) அதிகாலையில் நேரில் வீடு, வீடாகச் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார்கள்.

பெருமாள்புரம், சாராள்தக்கர் பெண்கள் கல்லூரி பகுதிகளில் நடைபெற்று வரும் மெகா துப்புரவு பணிகள் மற்றும் டெங்கு கொசு ஒழிப்பு பணிகளை நேரில் சென்று பார்வையிட்டனர். தொடர்ந்து, வீடு, வீடாக சென்று குடிநீர் தொட்டிகள், டிரம்கள் உள்ளிட்டவைகள் சுத்தமாக பராமரிக்கப்பட்டு வருகிறதா என ஆய்வு செய்தார். டெங்கு கொசு ஒழிப்பு பணியாளர்களிடம் கொசு ஒழிப்பு பணிகளை தீவிரமாக பணியாற்ற வேண்டுமென உத்தரவிட்டனர். மேலும், புதிதாக கட்டப்பட்டு வரும் கட்டடங்களில் கொசு புழு உற்பதியாகிறதா என்பதையும், கொசு ஒழிப்பு புகை மருந்து அடிப்பதையும் ஆய்வு மேற்கொண்டார். பெருமாள்புரம் சாராள்தக்கர் பெண்கள் கல்லூரி எதிர்புறம் புதிதாக கட்டப்பட்டு வரும் வீடு, ஜோசப் தெரு பகுதிகளில் புதிதாக கட்டப்பட்டு வரும் வீடு ஆகிய வீடுகளின் மாடியில் கான்கீரிட் பகுதியில் தூய்மை பணிகளை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆகியோர் ஆய்வு செய்து கொசு புழுக்கள் உள்ளதை கண்டறிந்து தலா ரூ.50 ஆயிரம் ஆபராதம் விதிக்க மாநகராட்சி அலுவலர்களுக்கு உத்தரவிட்டனர். மேலும், டெங்கு கொசு புழுக்கள் மற்றும் கொசுக்கள் ஒழிக்கும் பணிகளை தீவிரமாக மேற்கொள்ள மாநகராட்சி பணியாளர்களுக்கு உத்தரவிட்டனர். டெங்கு கொசு ஒழிப்பு தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தினார்கள். ஜோசப் தெரு பகுதியில் டெங்கு பாதிப்புக்குண்டாகி மருத்துமனையில் சிகிச்சை பெற்று வரும் செல்வன் ஆல்ரின் ஜோசப் வீட்டிற்கு சென்று குடும்பத்தினருக்கு டெங்கு விழிப்புணர்வு குறித்து எடுத்துரைத்தனர்.

ஆய்வின் போது, மாநகராட்சி ஆணையாளர் (பொ) திரு.நாராயணநாயர், மாநகர நல அலுவலர் மரு.பொற்செல்வன், சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர் மரு.சோமசுந்தரம், உதவி ஆணையர் திருமதி.கவிதா, உதவி செயற்பொறியாளர் திரு.கருப்பசாமி, மாவட்ட சுகாதார கல்வி அலுவலர் திரு.அப்துல்காதர், உதவி பொறியாளர் திரு.லெனின், சுகாதார அலுவலர் திரு.சாகுல், சுகாதார ஆய்வாளர்கள் திரு.சங்கரநாராயணன், திரு.சொக்கலிங்கம், இளநிலை பொறியாளர் திரு.பாஸ்கர் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.